செ.வெ.எண்.11 நாள் : 06.01.2017

# பத்திரிக்கைச் செய்தி

அரியலூர் மாவட்டத்தில், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் சிறப்புத் திட்டங்களாகிய விலையில்லா கறவைப் பசுக்கள் (ம) விலையில்லா வெள்ளாடுகள் வழங்கும் திட்டம் 2016-17-ன் கீழ், டிசம்பர்-2016 முதல் பிப்ரவரி-2017 முடிய விலையில்லா கறவைப் பசுக்கள் மற்றும் விலையில்லா வெள்ளாடுகள் / செம்மறியாடுகள் கொள்முதல் செய்து வழங்க, பயனாளிகளை தேர்வு செய்வது தொடர்பான சிறப்பு கிராமசபை கூட்டங்கள் நடைபெற உள்ளது.

விலையில்லா கறவைப் பசுக்கள் வழங்கும் திட்டம் சனவரி 2017-ல் செயல்படுத்தப்பட உள்ள அனைக்குடம் கிராம ஊராட்சியைச் சேர்ந்த ஏழை எளிய பெண்கள் 12.01.2017 அன்று நடைபெற இருக்கும் சிறப்பு கிராமசபை கூட்டத்திலும், பிப்ரவரி-2017-ல் செயல்படுத்தப்பட உள்ள T.K.P..நத்தம் கிராம ஊராட்சியைச் சேர்ந்த ஏழை எளிய பெண்கள் 13.01.2017 அன்று நடைபெற இருக்கும் சிறப்பு கிராமசபை கூட்டத்திலும் மற்றும் விலையில்லா வெள்ளாடுகள் வழங்கும் திட்டம் டிசம்பர்-2016-ல் செயல்படுத்தப்பட உள்ள அணிக்குதிச்சான், அழகாபுரம், கோவிந்தபுரம், ஆமணக்கந்தோண்டி, ஆனந்தவாடி, ஏலாக்குறிச்சி ஆகிய கிராம ஊராட்சிகளைச் சேர்ந்த நிலமற்ற ஏழை எளிய பெண்கள் 11.01.2017 அன்றும், சனவரி- 2017-ல் செயல்படுத்தப்பட உள்ள ஆண்டிமடம், ஆலந்துறையார்கட்டளை, எருத்துக்காரன்பட்டி, அங்கராயநல்லூர், ஆலத்தியூர், அன்னிமங்களம், சின்னபட்டாக்காடு, ஆதிச்சனூர், அம்பாபூர், அய்யப்பநாயக்கன்பேட்டை ஆகிய கிராம ஊராட்சிகளைச் சேர்ந்த நிலமற்ற ஏழை எளிய பெண்கள் 12.01.2017 அன்றும், பிப்ரவரி-2017-ல் செயல்படுத்தப்பட உள்ள அய்யூர், ஆலத்திபள்ளம், இடையார், தேவாமங்களம், அசவீரன்குடிக்காடு, சிந்தாமணி, அனைக்குடம், அன்னிக்குறிச்சி ஆகிய கிராம ஊராட்சிகளைச் சேர்ந்த நிலமற்ற ஏழை எளிய பெண்கள் 13.01.2017 அன்றும், சம்மந்தப்பட்ட கிராம ஊராட்சிகளில் நடைபெற இருக்கும் சிறப்பு கிராமசபை கூட்டத்தில் கலந்துகொண்டு மனு அளித்து பயன்பெறுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

மேற்படி மனுக்களை சம்மந்தப்பட்ட கிராம ஊராட்சி செயலாளர்களிடம், முதல் கிராம சபை நடைபெறும் நாட்களிலிருந்து ஒரு வாரம் வரை அளித்து, முறையே **18.01.2017, 19.01.2017** (ம) **20.01.2017** ஆகிய தேதிகளில் நடைபெறும் இரண்டாவது கிராம சபை கூட்டத்திலும் கலந்துகொண்டு தகுதியான பெண் பயனாளிகள் தேர்ந்தெடுக்கப்பட உரிய ஒத்துழைப்பு நல்கிட சம்மந்தப்பட்ட கிராம ஊராட்சி பொது மக்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள் என மாவட்ட ஆட்சித்தலைவர் **திரு.எ.சரவணவேல்ராஜ், இ.ஆ.ப.,** அவர்கள் தெரிவித்துள்ளார்.

செய்தி வெளியீடு :- செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், அரியலூர்.